களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவக சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு, பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் தீர்மாணிப்பதற்கு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தற்றுணிபு அதிகாரத்தை வழங்குகின்றன

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றலும் காசுப் பாய்ச்சலும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையை தோற்றுவிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டுப் புலமைப்பரிசில் நிதிய முதலீட்டின் மூலம் மீளாய்வாண்டில் பெறப்பட்ட வட்டி வருமானமாகிய ரூபா 83,654 வருமானக் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தது.

(ஆ) வங்கி மீதிகளது உறுதிப்படுத்தலின் பிரகாரம், 06 நிலையான வைப்புகளது பெறுமதி ரூபா 19,147,006 ஆகும். எவ்வாறாயினும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அம் முதலீட்டுப் பெறுமதி ரூபா 18,915,063 ஆகியமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலையான வைப்புகளது பெறுமதி ரூபா 231,943 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) 1997 முதல் 2006 வரை நிறுவகத்திற்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 1,116,040 கிரயமுடைய சொத்துக்கள் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்தன. எனினும், அதற்குரிய நிதியத்தை கிரமமான அடிப்படையில் பதிவழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஈ) கிரயத்தை இனங்கண்டு கொள்ள முடியாத 159 சொத்துக்களது பெறுமதி ரூபா 581,800 ஆக 2016 ஆம் ஆண்டின்போது மீள மதிப்பீடு செய்யப்பட்டிருந்தபோதும், அப்பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(உ) மீளாய்வாண்டின்போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட சொத்துக்களது கிரயமும் திரண்ட தேய்மானமும் கணக்கிலிருந்து நீக்கப்படாது விற்பனை விலையாகிய ரூபா 15,450 தொங்கற் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 தொங்கற் கணக்கு

2011 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து வரும் தொங்கற் கணக்கின் செலவு மீதி ரூபா 5,120 ஆகியபோதும், இம் மீதியை இனங்கண்டு அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிலையான சொத்துப் பதிவேட்டின் பிரகாரம், 03 வகைச் சொத்துக்களது பெறுமதி ரூபா 43,953,197 ஆகியபோதும், நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 47,774,866 ஆகியமையால் விளக்கமளிக்கப்படாத வேறுபாடாக ரூபா 3,821,669 அவதானிக்கப்பட்டது.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1979 டிசெம்பர் 24 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டப்பின் படிப்பு நிறுவக சட்டவாக்கத்தின் 11(5) ஆம் பிரிவு | லீவு பெறாது தொடர்ச்சியாக 03 கூட்டங்களுக்குச் சமூகமளிக்காதுவிட்டால் பதவி விலகியதாகக் கருதப்படலாமெனினும், பீடத்தில் நியமனம் பெற்றிருந்த களனி பல்கலைக்கழக பாளி கற்கைப்பிரிவின் தலைவர் மீளாய்வாண்டில் கூட்டம் எதிலும் சமூகமளிக்காதிருந்ததுடன், கலாசாரக் கல்விப் பிரிவைப் பிரதிநிதித்துவப்படுத்தியவாறு சமூகமளித்திருந்த பீட மன்றத்தின் அங்கத்தவர் மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியக் குழுவின் பிரதிநிதியாகப் பங்குபற்றிய பீட மன்ற அங்கத்தவர் ஆகியோர் 04 கூட்டத் தொடர்களுக்குச் சமூகமளிக்காதபோதும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஆ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கை | கணனித் துணைப்பாகங்கள் மற்றும் மென் அணி சம்பந்தமாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்படவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 2,417,412 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 1,985,332 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 4,402,744 அதிகரிப்பு தென்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் ரூபா 12,343,876 அதிகரித்தபோதும், அரசாங்கத்தின் மீண்டுவரும் மானியம் ரூபா 10,192,000 மற்றும் ஏனைய வருமானம் ரூபா 6,554,621 என அதிகரிப்புக்குள்ளாகியமை மேற்படி நிதிப் பெறுபேற்று அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்யை 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 முதல் 2016 வரை நிதிப் பெறுபேற்றில் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தபோதும், 2017 ஆம் ஆண்டில் மிகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிதிப் பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம் மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 19,584,159 ஆகவிருந்த பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 51,327,517 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

நிறுவகம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரித்திருந்தபோதும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் உட்சேர்க்க வேண்டிய நிறுவக அமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி என்பன தொடர்பான விபரம், வரவு, செலவுத் திட்டம் நடவடிக்கைத் திட்டம், மற்றும் கட்டு நிதித் திட்டம் ஆகியவற்கை அத்திட்டத்தில் சேர்த்திருக்கவில்லை.

#### 4.1.2 நடவடிக்கைகளும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டுப் பிக்கு மாணாக்கர்கள் பெருமளவில் பதிவு செய்யும் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த மாணாக்கரது எண்ணிக்கை 296 ஆகியபோதும், மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டிருந்த மாணாக்கரின் எண்ணிக்கை 93 ஆகவிருந்ததுடன் 68 சதவீத குறைவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கல்விசார் மற்றும் கல்விசாராப் பதவியணி உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு ஆராய்ச்சிகளுக்கான படியாக ரூபா 2,226,043 மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவர்கள் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கும் அவற்றினதும் செயல் முன்னேற்றம் ஆராய்ச்சிக்குக் குழுவால் பரிசீலிக்கப்பட்டதற்குமான சான்று அவதானிக்கப்படாததுடன், நிறைவு செய்த ஆராய்ச்சிகளது இறுதி அறிக்கைகளும் சமர்ப்பிக்கபட்டவில்லை.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான பட்டோலையின் பிரகாரம் ஆராய்ச்சிகள் மற்றும் புத்தக வெளியீடுகள் என்பவற்றினது மீதி 3,947 ஆகியபோதும், நேரடியாகக் கையிருப்பு சரி, பிழை பார்க்கப்பட்டபோது மீதி 3,605 ஆகவிருந்ததால் ரூபா 123,188 பெறுமதியான 342 புத்தகங்கள் குறைவாகக் காணப்பட்டபோதும், அக்குறைவை இனங்காண்பதில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.3 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் வங்கிக் கணக்கொன்றில் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,559,436 மீதி இருந்ததுடன், ஆண்டு முழுவதும் இக் கணக்கில் சராசரியாக ரூபா 5,367,521 மீதி நிலவியதால் நிறுவகத்தின் நிதியம் குறைவாகப் பயன்படுத்தப்பட்டதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேவையை இனங்காணாது புத்தகங்களையும் பிரசுரங்களையும் விற்பனைக்கென அச்சிட்டமையால் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏறக்குறைய 10 ஆண்டுகள் பழமை வாய்ந்த மெதுவாக நகரும் 3258 புத்தகங்களது மீதி நிலவியது. இவற்றுள் ஆண்டின்போது விற்பனை செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாக வழங்கப்பட்ட புத்தகங்களது எண்ணிக்கை 347 மாத்திரமே.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களையும் இலக்கையும் அடைதல்

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் அமைச்சினது செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை மற்றும் நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 "நிகழ்ச்சி நிரலின் " பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் செயலாற்ற வேண்டுமாயினும், பாளி மற்றும் பௌத்த கல்வி பட்டபின் படிப்பு நிறுவகம் மீளாய்வாண்டின் பொருட்டு தமது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்படலாம் என்பதை அறிந்திருக்கவில்லை.

## 6. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 வரவு, செலவு திட்டக் கட்டுபாடு

2017 ஆம் ஆண்டிற்கெனத் தயாரிக்கப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் பிரகாரம், வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே 58 முதல் 100 சதவீத வேறுபாடுகள் நிலவியதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை மற்றும் 25 ஆண்டுகள் பழமை வாய்ந்த பயன்படுத்த முடியாத வாகனத்தைத் துரிதமாகச் கைதவிர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | களஞ்சியக் கட்டுப்பாடு | கையிருப்புக் குறைவுகளையும் மிகைகளையும் சீராக்கல் செய்து கணக்கைத் திருத்தஞ் செய்யாமை. |
| (இ) | வரவு செலவுத் திட்டக் கட்டுப்பாடு | தேவைக்கதிகமாக செலவினத்தை மதிப்பீடு செய்தல் |